கும்பகோணம் மாநகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் மாநகர்மன்றம்

## அவசர கூட்டம்

## நாள் : 30.12.2021

# 29.12.2021ம் தேதிய மாநகர்மன்ற அவசர கூட்ட பொருள்

**01)** அரசாணை நிலை எண். 136 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.12.2021–ன்படி கும்பகோணம் மாநகராட்சியிலுள்ள 48 வார்டுகளையும் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் 31.03.2019 வரையுள்ள சொத்துவரி கேட்பு பதிவேட்டின்படியான குடியிருப்புகள் ஆகியவற்றை கணக்கிற்கொண்டு மாநகராட்சியின் வார்டுகள் மறுவரையறை உத்தேசங்கள் தயார் செய்யப்பட்டு அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் அறியும் வண்ணம் பார்வைக்கு வைக்கப்பட்டது. மேலும் 27.12.2021 அன்று வார்டு மறுவரையறை ஆணையத்தின் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கருத்துக்கேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட எழுத்துபூர்வமான ஆட்சேபணை மனுக்கள் மொத்தம் 62 மனுக்களில் 2 மனுக்கள் ஏற்றுகொள்ளப்பட்டு, 60 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. எனவே, 48 வார்டுகளுக்கான இறுதி வார்டு மறுவரையறை கருத்துருக்களை உரிய வழியாக அனுப்பி வைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

இறுதி வரைவு வார்டு மறுவரையறை செய்யப்பட்ட கருத்துருவை பார்வையிட்டு ஒப்புதல் அளித்து உரிய வழியாக அனுப்பி வைக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**ந.க.எண். 6348 /2021/டி1**

---

**02)** தமிழ்நாடு அவசரசட்டம் 07/2021 நாள்.20.12.2021 படி கும்பகோணம் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 20779/2021/மாநஅ1, நாள் 27.11.2021ம் தேதியிட்ட கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளவாறு மாநகராட்சி சட்ட விதிகளின்படி மாநகராட்சிக்குரிய 1) கணக்கு, (Accounts Committee), 2) கல்வி (Education Committee), 3) பொது சுகாதாரம் (Public Health Committee), 4) வரி விதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance Excluding Taxation Appeals Committee), 5) நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement Committee) மற்றும் 6) பொதுப்பணிகள் (Works Committee) நிலைக்குழுக்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமெனவும், தமிழ்நாடு மாநகராட்சிகள் நிலைக்குழுக்கள் தோற்றுவித்தல் சட்டம் 1997 விதி 4இன்படி மாநகராட்சிக்குள்ள பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து ஒவ்வொரு நிலைக்குழுவிலும் குறைந்த பட்சம் 6 முதல் அதிக பட்சமாக 15 மாமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றிருக்கலாம் எனவும் நிலைக்குழுக்களில் இடம் பெறும் மாமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் அதில் பெண் உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் எண்ணிக்கைகளின் விபரத்தினை மாமன்றத்தில் முடிவு செய்தும், மறைமுக தேர்தல் நடத்திட ஏதுவாக உரிய கருத்துருக்களை அனுப்பிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் மாநகராட்சி நகராட்சியாக இருந்த நிலையில், கும்பகோணம் நகராட்சி 43 வார்டுகள் மற்றும் தாராசுரம் பேரூராட்சி வார்டுகள் 5 ஆக மொத்தம் 48 வார்டுகளை மட்டும் உள்ளடக்கிய மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் மேற்கண்ட 1) கணக்கு (Accounts Committee), 2) கல்வி (Education Committee), 3) பொது சுகாதாரம் (Public Health Committee), 4) வரி விதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance Excluding Taxation Appeals Committee), 5) நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement Committee) மற்றும் 6) பொதுப்பணிகள் (Works Committee) என்ற ஆறு நிலைக்குழுக்கான மாமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினை பின்வருமாறு நிர்ணயம் செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிலைக்குழு விபரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கணக்கு (Accounts Committee) | 3 | 3 | 6 |
| 2 | கல்வி (Education Committee) | 3 | 3 | 6 |
| 3 | பொது சுகாதாரம் (Public Health Committee) | 3 | 3 | 6 |
| 4 | வரி விதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance Excluding Taxation Appeals Committee) | 3 | 3 | 6 |
| 5 | நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement Committee) | 3 | 3 | 6 |
| 6 | பொதுப்பணிகள்(WorksCommittee) | 3 | 3 | 6 |
| | மொத்தம் | 18 | 18 | 36 |

அலுவலக குறிப்பு

1. இம்மாமன்றம் 1) கணக்கு (Accounts Committee), 2) கல்வி (Education Committee), 3) பொது சுகாதாரம் (Public Health Committee), 4) வரி விதிப்பு, நிதி மற்றும் வரி மேல்முறையீடு அல்லாமல் (Taxation and Finance Excluding Taxation Appeals Committee) 5) நகர திட்டமிடல் மற்றும் மேம்பாடு (Town Planning and Improvement Committee) மற்றும் 6) பொதுப்பணிகள் (Works Committee) என்ற ஆறு நிலைக்குழு தலா 6 மாமன்ற உறுப்பினர்கள் இடம் பெறவும், அவ்வுறுப்பினர்களில் 50 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திடவும், மேலும் மேற்கண்ட ஒவ்வொரு நிலைக்குழுக்களிலும் தேர்ந்தெடுக்கப்படும் மாமன்ற உறுப்பினர்களில் அவர்களுக்குள் ஒருவரை மேற்படி நிலைக்குழுவின் தலைவராக தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் மாமன்றம் இசைவு தெரிவிக்கலாம்.
2. மேலும் மேற்கண்டவாறு இம்மாநகராட்சியின் 6 நிலைக்குழுக்களுக்கும் 36 உறுப்பினர்களை எண்ணிக்கையாக (Strength Fixation) நிர்ணயம் செய்திட அரசின் அனுமதியினை பெறவும், மேற்கண்ட எண்ணிக்கையினை மாநில தேர்தல் ஆணையத்திற்கு தெரிவித்து மறைமுக தேர்தல் நடத்திடவும் இசைவு தெரிவிக்கலாம்.

**ந.க.எண் 6348 /2021/டி1**

---

**03)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.23572/2019/மா.ந.அ1, நாள்.27.12.2021–ல் புதியதாக உருவாக்கப்பட்ட மாநகராட்சிகளில், மக்களின் அடிப்படை வசதிகளை உடனுக்குடன் நிறைவேற்றிடவும், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், நிர்வாக நலனுக்காக வார்டு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும் அதற்கான உரிய கருத்துருக்களை அனுப்பி வைத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் மாநகராட்சியில் உள்ள 48 வார்டுகளை கீழ்கண்டுள்ளவாறு 4 மண்டல குழுக்களாக உத்தேசிக்கப்பட்டு அதன் பிரேரணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்க மாமன்றம் ஒப்புதல் கோரப்படுகிறது.

| மண்டலம் | மண்டலத்தில் அடங்கிய வார்டுகளின் எண்ணிக்கை | மொத்த வார்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| I | 1,2,3,4,5,6,11,12,13,14,15,16 | 12 |
| II | 7,8,9,10,17,18,19,20,21,22,23,25 | 12 |
| III | 27,28,29,30,31,32,33,34,35,36,37,38 | 12 |
| IV | 24,26,39,40,41,42,43,44,45,46,47,48 | 12 |

**அலுவலக குறிப்பு.** மக்களுக்குரிய அடிப்படை வசதிகள் மற்றும் கட்டமைப்பை மேம்படுத்தவும், பொதுமக்கள் உள்ளாட்சி அலுவலகத்தை எளிதாக அணுகும் வகையிலும் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்ட இப்பிரேரணையை ஒப்புதலுக்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**ந.க.எண்.6348/2021/டி1**

---

**04)** இந்நகராட்சியில் 2021–22ம் ஆண்டு நடைப்பெறும் பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரி தொகைக்கும், இந்நகராட்சி பணியாளர்களின் ஊதியத்தல் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி தொகைக்கும் அவ்வப்போது (TDS) E-Filing (INTEGRATED DATE MANAGEMENT SERVICE PRIVATE LIMITED நிறுவனத்தின் மூலம் செய்வதற்கு 2021–2022ம் ஆண்டுக்கு உத்தேச செலவினமாக ரூ.35,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.13647/2012/பி2**

---

**05)** இந்நகராட்சியில் பணிகள் செய்யும் ஒப்பந்ததாரர்களுக்கும், விநியோகஸ்தர்களும் வழங்கப்படும் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவைவரி தொகையினை வரியில்லா இனங்களில் பிடித்தம் செய்யப்படும் சேவைவரி தொகையினையும் "E" - Filling TDS திரு.ராமநாதன் பட்டயக்கணக்கர் மூலம் செய்யவதற்கும், 2021 – 2022ஆம் ஆண்டிற்கான 2, 3 மற்றும் 4வது காலாண்டிற்கு உத்தேச செலவினமாக ரூ.40,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.11075/2019/பி2**

---

**06)** கும்பகோணம் நகரம், கதவு எண்.75, பச்சையப்பன் தெரு முகவரியில் வசிக்கும் திரு.ஐ.இர்ஃபான் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P(MD) No.20370/2021 என்ற எண்ணில் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் அறிஞர் அண்ணா பேருந்து நிலைய கட்டண கழிவறையை **31.03.2022** வரை தொடர்ந்து நடத்திவர அளிக்கப்பட்டிருந்த உத்திரவினை ரத்து செய்ததை ஆட்சேபித்தும், **28.10.2021–**ல் மேற்படி கட்டண கழிவறையை ஏலம் விடப்பட்டதை ரத்து செய்யக்கோரியும் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் திரு.எம்.ராஜராஜன், வழக்கறிஞர் நகராட்சி சார்பில் ஆஜராகி எதிர் வழக்காடியதன் பேரில் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வழக்கறிஞர் கட்டணமாக தொகை **ரூ.10,000/–** அளிக்க கோரப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை வழக்கறிஞர் திரு.எம்.ராஜராஜன் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**
1. அனுமதி அளிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் முன் அனுமதி பெற்று வருவாய் நிதியிலிருந்து தொகை வழங்கியதையும் அங்கீகரிக்கலாம்.

**ரிட் மனு எண்.20370/2021/சி6**
**ந.க.எண்.11016/ 2021 /சி6**

---

**07)** இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.P.8526 (காம்பேக்டர் வாகனம்) பிளேடு மற்றும் சாப்ட் பழுதடைந்துள்ளது. அதனை சரிசெய்யவும், அதற்குண்டான உத்தேச செலவினம் **ரூ.35,000/–** (முப்பத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அ. அனுமதி அளிக்கலாம்
ஆ.செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
இ. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.9574 / 2021 / எச்1**

---

**08)** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணிகள் மேற்கொள்ள தனியார் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அனுப்பும் பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் K.Dis/17964/J3/2019 நாள் **10.02.2020** நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளி கோரி நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு **01.07.2020** முதல் ஓராண்டு காலத்திற்கு எஸ்.எஸ்.இன்சினியர்ஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் பணியில் திருப்திகரம் இல்லாத காரணத்தால் காலநீட்டிப்பு செய்ய இயலாது என தெரிவிக்கும் பொருட்டு பணி உத்திரவினை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி எண்:1079 நாள்: **30.06.2021** பெறப்பட்டதோடு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் காலம் வரை நகரின் பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் பேணிகாக்கும் பொருட்டு **01.07.2021** முதல் சுய உதவிக்குழு மூலம் பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

டிசம்பர் **2021** மாதத்திற்கு சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், ஜனவரி **2022** மாதமும் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2020–2021ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி நிர்ணயம் ந.க.11845 /2020/ஜி2 நாள்:11.11.2020 | நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | உத்தேச செலவினம் ஒரு மாததத்திற்கு (நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| | ரூ 411 /– | ரூ.12,330 /– |

ஜனவரி 2022 மாதத்திற்கு தோராயமாக 415 பணியாளர்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**49,75,000** /–க்கு மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

(அ) புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் காலம் வரை ஜனவரி 2022 மாதத்திற்கு சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.6256 / 2019 / எச்1**

---

**09)** இந்நகராட்சியின் பேருந்து நிலைய தூய்மைப் பணி பராமரிப்பு விளம்பர நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிலையில் தூய்மைப்பணி சரிவர முறையாக மேற்கொள்ளப்படாத காரணத்தால், பொதுமக்களிடமிருந்து பெருமளவில் புகார்கள் வரப்பெற்றது. எனவே, பேருந்து நிலைய தூய்மைப்பணியை சுய உதவிக்குழுக்கள் மூலம் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அப்பணியை மேற்கொள்ள 31–பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவே அப்பணியினை 01.01.2022 முதல் 30.06.2022 முடிய சுய உதவி குழுக்கள் மூலம் மாவட்ட ஆட்சியரின் அட்டவணையில் அனுமதிக்கப்பட்ட தினக்கூலியில் மேற்கொள்ளவும் இதற்குண்டான உத்தேச செலவிணம் கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

01.01.2022 முதல் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் பேருந்து நிலையம், தூய்மை பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2020–2021ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி நிர்ணயம் ந.க.11845 /2020/ஜி2 நாள்:11.11.2020 | நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | உத்தேச செலவினம் ஒரு மாததத்திற்கு (நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| | ரூ 411 /– | ரூ.12,330 /– |

01.01.2022 முதல் 31.06.2022 முடிய சுய உதவிக்குழுக்கள் மூலம் பணிகள் மேற்கொள்ள மாதத்திற்கு தோராயமாக 31 பணியாளர்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**25,00,000** /–க்கு மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

(அ) ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் காலம் வரையோ அல்லது 01.01.2022 முதல் 31.03.2022 வரையோ, எது முன்னோதோ அது வரை சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியை மேற்கொள்ளவும் அதற்குண்டான அதற்குரிய செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.8906 / 2021 / எச்1**

**10)** இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பாதாளசாக்கடைக்கான கழிவுநீர் உந்து நிலையங்களில் உள்ள மோட்டார்களை சரிசெய்து இயங்க செய்யும் பணிக்கு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினத்தொகை ரூ.480000/க்கு மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | Thiru.N.Saravanan,Contractor, Kumbakonam. | ரூ.530040 /– |
| 2 | M/s.AB Builders, Kumbakonam. | ரூ.467040 /– |

**அலுவலக குறிப்பு**

1) மதிப்பீட்டினைமன்றம் அங்கீகரிக்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள M/s.AB Builders Kumbakonam. நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

3) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 5316/2021/ /E3**

---

**11)** இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN.68.Q.1116 வாகனத்திற்கு இன்ஜின் ஆயில் சர்வீஸ், கியர் ஆயில் சர்வீஸ், பிரேக் பேடு, ஹெட் லைட் மற்றும் டேன்ஜர் கிளாஸ் போன்ற பழுதுகள் சரி செய்யும் பணிக்கு03.12.2021 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் முடிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | M/s.Sivasakthi Auto Works, Kumbakonam | Rs.12866/- |
| 2 | M/s.Dharmaraj auto Carriage, Thiruvarur, | Rs.14121 /- |
| 3 | M/s.AnnaiSathya Engineering works, Thiruvarur, | Rs.13455 /- |

**அலுவலக குறிப்பு**

1) வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள M/s.Sivasakthi Auto Works, Kumbakonam. நிறுவனத்தாரின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.11440/2021/ இ3**

---

**12)** இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஈப்பு வாகனம் எண் TN.68.Q.1116 வாகனத்திற்கு இன்ஜின் ஆயில் சர்வீஸ், கியர் ஆயில் சர்வீஸ், பிரேக் பேடு, ஹெட் லைட் மற்றும் டேன்ஜர் கிளாஸ் போன்ற பழுதுதுள் சரி செய்யும் பணிக்கு அங்கீகரிக்கப்பட்ட பணிமனையிலிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.15000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்

2) இச்செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம்

**ந.க.எண். 11440/2021/இ3**

---

**13)** கும்பகோணம் நகராட்சியில் வலையப்பேட்டை நீருந்து நிலையத்தில் 120 HP vertical turbine motor மற்றும் pump பழுது நீக்கும் பணிக்கு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.250000/க்கு மன்றத்தின் பார்வைக்கு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறைவு / **அதிகம்** |
|---|---|---|
| 1 | Thiru.N.Saravanan,Contractor, Kumbakonam. | மதிப்பீட்டை விட 0.6% குறைவு |
| 2 | M/s.AB Builders, Kumbakonam. | மதிப்பீட்டை விட 2.6% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> 1)மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.6% குறைவாக கொடுத்துள்ளThiru.N.Saravanan,Contractor, Kumbakonam. நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

3) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>ந.க.எண் 11353/2021 /E3</u>

---

**14)** கும்பகோணம் நகராட்சி புதிய அலுவலகத்திற்கு தேவைப்படும் 12V/65AH sealed maintence free (SMF) Battery 20 nos , இரண்டு UPS களை பழுது நீக்கம் செய்தும் மற்றும் பழைய அலுவலகத்திற்கு 1 KVA UPS புதிதாக பொருத்தும்பணிக்கு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.210000/க்கு மன்றத்தின் பார்வைக்கு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறைவு / **அதிகம்** |
|---|---|---|
| 1 | Thiru.N.Saravanan,Contractor, Kumbakonam. | மதிப்பீட்டை விட 0.6% குறைவு |
| 2 | M/s.AB Builders, Kumbakonam. | மதிப்பீட்டை விட 2.2% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u> 1) மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.6% குறைவாக கொடுத்துள்ளThiru.N.Saravanan,Contractor, Kumbakonam. நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

3) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

<u>ந.க.எண் 11449/2021 /E3</u>

---

**15)** வருவாய் நிதியின் கீழ் **வார்டு எண்** 3, KMS நகரில் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளில் WET MIX நிரப்பி சரி செய்யும் **பணி**யினை ரூ. 3,40,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர் மன்றம் தனது 25.11.2021ம் தேதிய தீர்மானம் எண்.1211–ல் அனுமதி வழங்கியதன்பேரில் 22.12.2021 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஆர்.அசோக்குமார் ஒப்பந்ததாரர், கும்பகோணம். | 297880 | 297660 | மதிப்பீட்டை விட 0.07 சதவிகிதம் குறைவு (GST தவிர்த்து) |
| 2. | ஜெ. சம்பத், ஒப்பந்ததாரர், கும்பகோணம் | 297880 | 298100 | மதிப்பீட்டை விட 0.07 சதவிகிதம் அதிகம் (GST தவிர்த்து) |

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீட்டைவிட 0.07 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு. ஆர்.அசோக்குமார், கும்பகோணம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 10899 /2021/இ2**
**ம.எண் 34 /2021–22**

---

**16)** இந்நகராட்சி வார்டு எண்.25– திருநாராயணபுரம் கிழக்கு தெருவில் மழைநீர் வடிகால் பணிக்கு ரூ.15.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கொண்ட செலவினத்தினை குடிநீர் மற்றும் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 10903/2021/இ2**

---

**17)** கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட எல்.பி.எஸ். சாலை புதுப்பிக்கும் பணி சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020-2021–ன் கீழ் சாலைகள் அமைக்கும் பணியின்போது சாலையின் நடுவே இருக்கும் மின் கம்பங்களை சாலையின் ஓரமாக மாற்றியமைக்கவும், தேவையான அமைப்புகளை ஏற்படுத்தி சாலையினை அகலத்தை குறைக்காமல் செப்பனிடும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மற்றும் அதற்குண்டான செலவீனம் ரூ.16.80 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை 15வது நிதிக்குழு மான்யம் Untied Grant நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 12985/2021/இ1**

---

**18)** இம்மாநகராட்சிக்கு உட்பட்ட கீழ்க்கண்ட மூன்று இடங்களில் 15வது நிதிக்குழு பொதுசுகாதார சிறப்புநிதி (Specific Grant for Health Sector) தேசிய சுகாதார இயக்கம் 2021–2022ன் கீழ் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் (Urban Primary Health Centre) அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.32454/2021/AMRTUT-2 நாள்.17.12.2021–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஈ.வெ.ரா.மணியம்மை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் | 25.00 |
| 2 | மேலக்காவேரி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் | 25.00 |
| 3 | கும்பேஸ்வரன் தெற்கு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் | 25.00 |

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.12798 / 2021 / இ1**

---

**19)** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 45 ரயில்வே ஸ்டேசன் குட்ஷெட் பின்புறம் T.S. No.2069/2-ல் அமைந்துள்ள தாமரைக் குளத்தினை தூர் வாரி சுற்றுச் சுவர் அமைத்து மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்கும் பணிகளை கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முழு மானியத்துடன் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (என்.எஸ்.) துறை நாள் 27.12.2021–ல் ரூ.117.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு வரப்பெற்றுள்ள அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் பதிவு செய்யலாம்.
2. உரிய தொழில்நுட்ப அனுமதிகள் கோரி முதன்மைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பவும், தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றவுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் .12863 /2021/இ1**

---

**20)** கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட எல்.பி.எஸ். சாலை புதுப்பிக்கும் பணி சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020-2021–ன் கீழ் தற்சமயம் சாலைகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி நடைபெற்று வரும் சாலைப் பணியினை ரயில் நிலையம் வரை நீட்டிப்பு செய்திடவும், காளியாப்பிள்ளை சந்திப்பு முதல் ரயில் நிலையம் வரை பழுதடைந்த சாலையினை செப்பனிட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மற்றும் அதற்குண்டான செலவீனம் ரூ.49.90 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை 15வது நிதிக்குழு மான்யம் Untied Grant நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 12984 /2021/இ1**

---

**21)** கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் எதிரில் செல்லக்கூடிய 3 வழி சாலை (சர்ச் ரோடு மற்றும் ஜாகிர் உசேன் சாலை இணைப்பு சாலை) போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதால், மேற்படி சாலையை இரண்டு வழி சாலையாக மாற்றி சாலையின் நடுவே தடுப்புகள் மற்றும் மின்கம்பங்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மற்றும் அதற்குண்டான செலவீனம் ரூ.12.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை 15வது நிதிக்குழு மான்யம் Untied Grant நிதியின் கீழ் மேற்கொள்ளவும், இயலாதபட்சத்தில் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.12981 /2021/இ1**

---

**22)** கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் உட்பகுதியில் உள்ள ஒடுதள தார்சாலை தற்சமயம் பெய்த பருவமழையின் காரணமாக மிகவும் சேதமடைந்துள்ளதை சீர் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மற்றும் அதற்குண்டான செலவீனம் ரூ.19.20 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை 15வது நிதிக்குப மான்யம் Untied Grant நிதியின் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 12982/2021/இ1**

---

**23)** கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்சமயம் பெய்த கனமழையின் காரமாக நகரின் தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீரினை ஆயில் எஞ்சின் மூலம் அப்புறப்படுத்தி அப்பகுதிகளில் GSB மற்றும் WMM அமைத்து மழைநீர் தேங்காதவாறு தாழ்வான பகுதிகளை உயர்த்தி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மற்றும் அதற்குண்டான செலவீனம் ரூ.16.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியினை 15வது நிதிக்குழு மான்யம் Untied Grant நிதியின் கீழ் மேற்கொள்ளவும், இயலாதபட்சத்தில் மாநகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் 12983/2021/இ1**

---

**24)** இந்நகராட்சி வார்டு எண்.26, புதிய பேருந்து நிலையத்தினுள் சென்னை பேருந்துகள் மார்க்கத்தில் அமைந்துள்ள பழுதுபட்டுள்ள இலவச கழிவறையினை புதுப்பிக்கும் பணிக்கு ரூ.20.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கொண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**ந.க.எண் 12310 /2021/இ2**

---

**25)** இந்நகராட்சி வார்டு எண்.32, கும்பேஸ்வரன் தெற்கு வீதியில் உள்ள ASO மருத்துவமனையின் மேல்தளம் மழைக்காலங்களில் நீர் கசிவு ஏற்படுவதால் அதில் சிமெண்ட் கொண்டு தளம் அமைக்கவும், மழைநீர் கட்டிடத்தினுள் புகாமலிருக்க Polycarbonate Sheet மூலம் அடைக்கவும், வாயிலில் மழைநீர் வடிகாலுக்கு கான்கீரீட் சிலாப் அமைக்கும் பணிகளை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள ரூ.1.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:** அ. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.12309 / 2021 / இ2**

---

**தனி அலுவலர் மற்றும்**
**மாநகராட்சி ஆணையர்**
**கும்பகோணம் மாநகர்மன்றம்**